# வாழை மரத்துக்கும் அரைக்கீரைக்கும் கல்யாணம்



சென்னைப் போன்ற நகர்ப்புறங்களில் கீரைகளுக்கு இருக்கும் மரியாதையே தனி. இதையே தனது மூலதனமாக்கிக் கொண்டு, அரைக்கீரைச் சாகுபடியில் அசத்தி வருகிறார் கமலக்கண்ணன்.சென்னையும் காஞ்சிபுரம் மாவட்டமும் உரசிக்கொண்டிருக்கும் மேற்குப் பகுதியில் மௌலிவாக்கம் கிராமத்தின் அருகே இருக்கும் பரணிப்புத்தூர் கிராமத்தில் தான் கமலக்கண்ணனின் (98406-87371) அரைக்கீரை சாகுபடி றெக்கை கட்டிப் பறக்கிறது.பதினைஞ்சி வயசிலிருந்தே விவசாயம் தான் பொழப்புன்னு ஆகிப்போச்சி. இந்த ஒண்ணரை ஏக்கர் தோட்டத்துலு இருபது வருஷமா விவசாயம் பண்றேன். இது குத்தகை நிலம்தான். இந்த ஏரியாவுல இன்னி தேதிக்கு ஒரு ஏக்கர் நெலம் கோடி ரூபாயைத் தாண்டி போயிக்கிட்டிருக்கு. சுத்தி விவசாயம் பார்க்கறவங்க குறைய ஆரம்பிச்சிட்டாங்க.

இந்தச் சூழ்நிலையிலயும் ஒரு மகராசன் இந்த நிலத்தைக் குறைஞ்ச தொகைக்கு எனக்கு குத்தகைக்குக் கொடுத்திருக்கார்.அவரோட புண்ணயத்தால கடனாளி ஆகாம, என் பொழைப்பு சந்தோஷமா ஓடுது. ஏற்கெனவே வாழைத் தோட்டத்துக்கு நடுவுல கத்தரி, வெண்டி இதெல்லாம் போட்டிந்தேன். இப்ப ரெண்டு வருஷமா வாழைக்கு நடுவுல அரைக்கீரையையும் கோட ஆரம்பிச்சிட்டேன்.கீரையை மட்டும் தனியா போடலாம் தான். ஆனா, கீரையில திடீர்ன்னு பூச்சி, புழு தாக்குதல் இருந்தா.. முதலுக்கே மோசமாயிரும். அதனால தான் நான் ஊடுபயிரா பண்றேன். இதுல கீரை மோசம் போனாலும் வாழை கைக்கொடுத்து தூக்கிவிட்டுடும் என்று சொன்னவர் தன்னுடைய சாகுபடி தொழில்நுட்பங்களை விவரித்தார்.நிலத்தைத் தேர்ந்தெடுத்து கொள்ளவேண்டும் (கமலக்கண்ணன் 25 சென்ட் நிலத்தில் பயிரிட்டிருக்கிறார்) டிராக்டர் கொண்டு 2 சால் உழவு ஓட்டவேண்டும். ஒன்றே கால் சென்ட்டுக்கு ஒரு பாத்தி என்று அமைத்தால், மொத்தம் 20 பாத்திகள் வரும். ஆறு அடிக்கு ஒரு கன்று வீதம் 250 வாழைக் கன்றுகள் நடமுடியும்.

ஒரு அடிக்கு ஒரு அடி ஆழம் மற்றும் அகலமுள்ள குழிப் பறித்து, தொழுவுரம் போட்டு வாழைக்கன்றுகளை நடவு செய்து, உயிர்த் தண்ணீர் விடவேண்டும், மூன்று நாள் கழித்து, அரைக்கீரை விதைப்பதற்கான வேலைகளைத் தொடங்கவேண்டும். பாத்திகளில் காலியாக உள்ள இடத்தில் ஒரு டன் தொழுவுரத்தை தூவிவிடவேண்டும் அதன் மீது, கீரை விதைகளை தூவிவிடவேண்டும் (25 சென்ட் நிலத்துக்கு நான்கு கிலோ கீரை விதைகள் தேவைப்படும். மற்ற விவசாயிகளிடமோ... அல்லது தனியார் கடைகளிலோ

விதைகளை வாங்கலாம்). உடனே பாத்திகளில் தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். விதைத்த மூன்றாம் நாள் கீரை முளைத்து விடும். அதன் பிறகு வாரம் ஒரு தண்ணீர் கொடுத்தால் போதும். விதைத்த ஒரு மாதம் கழித்து முதலாவது அறுவடை, அடுத்து, பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை அறுவடை செய்யலாம். தைப்பட்டத்தில் விதைத்தால் புரட்டாசி வரை எட்டு மாதங்களுக்கு தொடர்ந்து மகசூல் பார்க்கலாம்.

முதல் அறுவடை முடிந்த பிறகு, 15 நாட்களுக்கு ஒரு முறை யூரியா 10 கிலோ, டிஏபி 10 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ ஆகியவற்றை கீரைப்பாத்திகளில் போடவேண்டும். கீரை நன்கு அடர்த்தியாக வளரும். (இயற்கை உரம் போட்டாலும் கூட போதும் என்று கமலக்கண்ணனிடம் சிலர் யோசனை சொல்கிறார்களாம். இன்னமும் அதை இவர் முயற்சிக்கவில்லை அடுத்த தடவை முயற்சித்துப் பார்க்கப் போகிறாராம்) பூச்சித் தாக்குதல் இருந்தால் மாதம் ஒரு முறை பவர்-ஸ்பிரேயர் மூலம் எண்ணெய் மருந்து (இதுவும் பூச்சிக்கொல்லிதான்) அடிக்கலாம்.பூச்சிக்கொல்லி அடிக்கத் தேவையில்லை என்று நினைப்பவர்கள். இயற்கையான முறையிலும் புழு, பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். ஒவ்வொரு பாத்திக்கும் நடுவில் புளிச்சக்கீரையை விதைக்கலாம்.

அதே போல வரப்பு ஓரத்தில் அகத்திக் கீரையை நடவு செய்யலாம். அரைக்கீரையைத் தாக்க வரும் பூச்சிகளும், புழுக்களும் புளிச்சக்கீரை மற்றும் அகத்திக்கீரை பக்கம் திரும்பிவிடும். குறிப்பாக படைப்புழுத்தாக்குதல் குறைந்து விடும்.

அதே சமயம், புளிச்சக்கீரை மற்றும் அகத்திக்கீரை மூலமாகவும் தனியாக ஒரு வருமானத்தைப் பார்க்க முடியும்.25 செண்ட் நிலத்தில் ஒரு அறுவடைக்கு 1,250 கட்டுகள் வீதம் கீரை கிடைக்கும். உள்ளூர் வியாபாரிகள் நேரடியாக வயலுக்கு வந்து கட்டு இரண்டு ரூபாய் என்று வாங்கிச் செல்கிறார்கள். வெளியில் 5 ரூபாய் வரை விற்பனை செய்கிறார்கள்.அரைக்கீரை விதைத்து ஒன்பது மாதங்கள் ஆனதும், முழுமையாக கீரையை அகற்றி, தோட்டத்தை சுத்தம் செய்துவிடவேண்டும்.வாழையைப் பொறுத்தவரை, ஆண்டுக்கு இரண்டு தடவை உரம் வைத்து பராமரிக்கவேண்டும். தை மாதம் நடவு செய்தபோது தொழு உரம் மட்டும் வைக்கவேண்டும். மீண்டும் ஆடி மாதத்தில் ஒரு டன் தொழுவுரத்தை வாழைக்கு வைக்கவேண்டும். கூடவே, டிஏபி பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் இவற்றை தலா 10 கிலோ வீதம் வாங்கி, ஒன்றாகக் கலந்து கன்றுகளுக்கு வைக்கவேண்டும்.

அடுத்தது, கீரைச் சாகுபடி முடிந்து, அவை முற்றாக அழிக்கப்பட்ட பிறகு, கையோடு ஒவ்வொரு வாழைக்கும் மண் அணைத்து, யூரியா, டிஏபி தலா 10 கிலோ, வேப்பம்புண்ணாக்கு 5 கிலோ ஆகியவற்றை கலந்து ஒவ்வொரு வாழைக்கும் கொஞ்சம் கொஞ்சம் வைத்துவிட வேண்டும். வாழைக்கு பராமரிப்புச் செலவு குறைவு தான். கீரைக்கு கொடுக்கும் ஊட்டத்திலேயே அதுவும் வளர்ந்துவிடும்.வாழை மரம் நன்றாக வளர்ந்து, 10வது மாதம் பூத்துவிடும். (கமலக்கண்ணன், வாழைத் தார்களாக விற்பதில்லை. இலை, முழு மரம் என்றே விற்பனை செய்கிறார்) கல்யாணம், திருவிழா சமயங்கள் என்றால், பூவுடன் கூடிய ஒரு ஜோடி மரம் 200 ரூபாய்க்கும் போகும். காயுடன் இருந்தால் 400 ரூபாய்க்கும் விலை போகும். மக்களின் தேவையைப்பொறுத்து இந்த விலை இன்னும் கூடும். இலையிலும் தனியான லாபம் தான். பெரிய இலைகளாக கொண்ட ஒரு கட்டு (100 இலைகள்) 250 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை போகும். எப்படிப் பார்த்தாலும் ஒரு மரத்திலிருந்து 300 ரூபாய் வீதம் கிடைக்கும்.

25 செண்ட் நிலத்தில் அரைக்கீரை சாகுபடி செலவு - வரவு

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| 4 கிலோ விதை | 1,000 | |
| உரச்செலவு | 2,250 | |
| மருந்துச் செலவு | 1,350 | |
| மருந்தடிக்கும் கூலி | 1,440 | |
| அறுவடைக்கூலி | 7,200 | |
| மகசூல்அறுவடைக்கு 1,250 கட்டுகள்.மொத்தம் 17 அறுவடை ரூ. 2 x 21,250 கட்டுகள் | | 42,500 |
| மொத்தம் | 13,240 | 42,500 |
| நிகர லாபம் | | 29,260 |
| வாழைக்கான செலவு - வரவு | | |
| 250 கன்றுகள் ரூ. 5 x 250 | 1,250 | |
| இரண்டு சால் உழவு | 375 | |
| குழி பறிப்புக் கூலி | 500 | |
| தொழுவுரம் | 700 | |
| நடவின் போது உரம் | 700 | |
| ஆடி மாதத்தில் உரம் | 700 | |
| மண் அணைக்கும் செலவு | 300 | |
| ஒரு மரத்திலிருந்து வருமானம் 300 x 250 | | 75,000 |
| மொத்தம் | 4,525 | 70,475 |
| வாழையில் நிகர லாபம் | | 70,475 |
| கீரையில் நிகர லாபம் | | 29,260 |
| நிகர லாபம் | | 99,735 |

தோட்டத்தில் பெரும்பாலும் உழைப்பது சொந்த ஆட்கள் என்றாலும் அதுவும் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. வாழையை, வியாபாரிகளே ஆள் வைத்து வெட்டிச் சென்று விடுவதால், அறுவடைக்கூலி கணக்கில் சேர்க்கப்படவில்லை.